<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.</u>

**<u>O.S. No.166/2021</u>**

**<u>நாள்.02.03.2026</u>**

**<u>பி.வா.சா. 1-</u> முருகேசன்**

**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

இன்று நான் கண் கண்ணாடி கொண்டு வந்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் யாரால் யாருக்கு என்ன தேதியில் எழுதி கொடுக்கப்பட்டது என்றால் 01.12.1991 ல் கைலாச நாடார் மனைவி செல்லம்மாள், கணேசன் என்பவருக்கு எழுதிக்கொடுத்த ஆவணம். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள சொத்து 3 வது தபசில் சொத்துக்கு மேற்கு பக்கம் உள்ள சொத்து குறித்து 01.12.1991 ல் கைலாச நாடார் மனைவி செல்லம்மாள், கணேசன் என்பவருக்கு எழுதிக்கொடுத்த நன்கொடை ஆவணம் என்றால் சரிதான். **<u>சாட்சி மேற்படி ஆவணத்தை ஒப்புக்கொண்டிருப்பதால் மேற்படி ஆவணம் வா.சா.ஆ. 15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.</u>** மேற்படி வா.சா.ஆ. 15 நன்கொடை ஆவணத்தில் சர்வே எண் 297/2 ல் உள்ள சொத்து குறித்து எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ. 15 நன்கொடை ஆவணத்தில் எல்கையில் என் கைவச மனைக்கும் வடக்கு, சுப்பையா நாடார் புஞ்சைக்கும் தெற்கு, ரோட்டுக்கும் கிழக்கு, தெருவுக்கும் மேற்கு என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ. 15 நன்கொடை ஆவணத்தில் சொல்லப்பட்ட எல்கைகள் சரியானது என்றால் எழுதியிருப்பதை பார்த்து நான் சொல்கிறேன். தெருவுக்கும் மேற்கு என சொல்லப்பட்டிருப்பது நான் வழக்கில் சொல்லிய 3 வது தபசில் சொத்து என்றால் சரியல்ல. தெருவுக்கும் மேற்கு என சொல்லப்பட்டிருப்பது நான் வழக்கில் சொல்லிய 3 வது தபசில் சொத்து அதை நான் ஒப்புக்கொண்டால் எனது வழக்கிற்கு பாதகமாக அமைந்துவிடும் என்பதால் மறுக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி 21 செண்ட், 21 செண்ட் என இரண்டு பகுதிகளாக வாங்கியுள்ளார் என்றால் எப்படி வாங்கினார் என தெரியாது ஆனால் வாங்கியுள்ளார். வாதி யாரிடமிருந்து சொத்தினை வாங்கியுள்ளார் என்றால் காளியப்ப நாடாரிடமிருந்து. காளியப்ப நாடார் சந்திரசூரிய பிள்ளையிடமிருந்து சொத்தினை வாங்கியுள்ளார் என்றால் தெரியாது.

நான் எனது சொத்தினை சந்திரசூரிய பிள்ளையிடமிருந்து சொத்தினை வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். வாதி மற்றும் எனது முன்பாத்தியதஸ்தர் சந்திரசூரிய பிள்ளை என்றால் நான் சந்திரசூரிய பிள்ளையிடமிருந்து சொத்தினை வாங்கியுள்ளேன் அது மட்டும் தான் எனக்குத் தெரியும். எனக்கு சந்திரசூரிய பிள்ளை எழுதிக்கொடுத்த ஆவணத்திலும், வாதிக்கு சந்திரசூரிய பிள்ளை எழுதிக்கொடுத்த ஆவணத்திலும் சர்வே எண்.297/2J ல் உள்ள பாதையைக் காண்பித்து தான் எழுதிக் கொடுத்துள்ளார் அதை ஒப்புக்கொண்டால் எனது தரப்பு வழக்கிற்கு பாதகமாக அமைந்து விடும் என்பதால் மறுக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.12 மற்றும் வா.சா.ஆ.13 ஆவணங்கள் மூலமாக எங்கள் குடும்பத்தில் உள்ள அனைத்து சொத்துக்களையும் காண்பித்து பாகம் செய்துகொண்டோம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.12 மற்றும் வா.சா.ஆ.13 ஆவணங்களை எங்கள் தரப்பில் நாங்கள் தாக்கல் செய்யவில்லை வாதிதான் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். சர்வே எண்.297/2L1, L2 குறித்து என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.12 மற்றும் வா.சா.ஆ.13 ஆவணங்களில் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.12 மற்றும் வா.சா.ஆ.13 ஆவணங்கள் எந்த ஆண்டு எழுதப்பட்டவை என்றால் 25.10.2017 மற்றும் 02.11.2017. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.12 மற்றும் வா.சா.ஆ.13 ஆவணங்களில் சர்வே எண்.297/2J ல் எங்களுக்குப் பாத்தியப்பட்ட வீடு உள்ளது என சொல்லப்பட்டுள்ளதா என்றால் நாங்கள் பாகம் பிரித்த பிறகு, சர்வே எண்.297/2J மற்றும் சர்வே எண்.297/2L வந்தது அதற்கு முன்பு சர்வே எண்.297/2 மட்டும் தான் இருந்தது. சர்வே எண்.297/2 எந்த ஆண்டு உட்பிரிவினை ஆனது என்றால் எந்த ஆண்டு என தெரியாது நாங்கள் பத்திரம் எழுதும்போது பிரியவில்லை. சர்வே எண்.297/2 எத்தனை உட்பிரிவுகள் ஆனது என்றால் தெரியாது. சர்வே எண்.297/2 உட்பிரிவுகள் செய்யப்பட்டபிறகு, எங்களது சொத்துக்கள் எந்த புல எண்களில் உள்ளது என்றால் சர்வே எண்.297/2J, சர்வே எண்.297/2L1, சர்வே எண்.297/2L2 ல் உள்ளது மற்ற புல எண் உட்பிரிவுகள் ஞாபகமில்லை.

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.12 மற்றும் 13 பிறப்பிக்கப்பட்ட காலத்திலேயே எங்களது சொத்துக்கள் சர்வே எண்.297/2E சர்வே எண்.297/2L1, சர்வே எண்.297/2L2 ல் உள்ளது என காண்பித்துள்ளோம் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.12 மற்றும் 13 பிறப்பிக்கப்பட்ட காலத்தில் வழக்கு 3 வது தபசில் கட்டுமானம் கிடையாது அதனால் தான் மேற்படி ஆவணங்களில் காட்டப்படவில்லை என்றால் சரியல்ல. 3 வது தபசில் கட்டுமானம் சர்வே எண்.297/2L1, சர்வே எண்.297/2L2 உடன் சேர்ந்து கட்டப்பட்ட கட்டுமானம் என நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கிற்கு முன்பாக தான் 3 வது தபசில் கட்டுமானத்தை ஆக்கிரமித்து கட்டிவிட்டேன் என்றால் சரியல்ல. 3 வது தபசில் கட்டுமானம் சர்வே எண்.297/2J ல் உள்ளது என்பது எனது தரப்பு வழக்கு என்றால் சரிதான். 3 வது தபசில் கட்டுமானம் சர்வே எண்.297/2J ல் உள்ளது என்பதற்கு பத்திரமோ, பட்டாவோ, பதிவு ஆவணங்களோ இதுநாள்வரை தாக்கல் செய்யப்படவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை அவகாசம் கொடுத்தால் தாக்கல் செய்யலாம். சர்வே எண்.297/2J ல் எங்களுக்கு உரிமை உள்ளது என்பதைக் காட்ட பத்திரமோ, பட்டாவோ, பதிவு ஆவணங்களோ கிடையாது அதனால் தான் தாக்கல் செய்யவில்லை என்றாலும், வழக்கை கால தாமதப்படுத்த வேண்டும் என்ற காரணத்திற்காக அவகாசம் கொடுத்தால் தாக்கல் செய்யலாம் என சொல்கிறேன் என்றால் சரியல்ல ஒரே சொத்தாக இருந்தது அதில் கட்டியுள்ளோம். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக வாதிகளிடமிருந்து எங்களுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக வாதிகளிடமிருந்து எங்களுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது அதை வாங்கிக்கொண்டு நாங்கள் பதில் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 அஞ்சலக ஒப்புதல் அட்டையில் விஜயா என்பவர் கையொப்பம் போட்டுள்ளார் என்றால் அது அவருடைய கையொப்பம் கிடையாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 அஞ்சலக ஒப்புதல் அட்டையில் முருகேசன் என நான் கையொப்பம் போட்டுள்ளேன் என்றால் அது என்னுடைய கையொப்பம் கிடையாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 அஞ்சலக ஒப்புதல் அட்டையில் ஆறுமுகச்சாமி கையொப்பம் போட்டுள்ளார் என்றால் அது அவருடைய கையொப்பம் கிடையாது. என்னிடம் காட்டப்பம் பி.வா.சா.ஆ.1 எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் பாதை இல்லை என வாதிகள் ஒப்புக்கொண்டு எழுதியுள்ளார்கள் அதனால் தாக்கல் செய்தேன். வாதிகளுக்கும் எனக்கும் மேற்கு பக்கம் உள்ள பாதை சம்பந்தமாகவும் பிரச்சனை என்றால் சரிதான்.

என்னிடம் காட்டப்பம் பி.வா.சா.ஆ.1ல் மேற்கு எல்கை என்ன சொல்லப்பட்டுள்ளது என்றால் பொன்னுச்சாமி நாடார், கைலாசம், ஆறுமுகச்சாமி நாடார் புஞ்சை என காட்டப்பட்டுள்ளது. பொன்னுச்சாமி நாடார், கைலாசம், ஆறுமுகச்சாமி நாடார் புஞ்சை இடமானது பிரச்சனைக்குரிய பாதைக்கு மேற்கு பகுதியில் உள்ளது என்றால் எனது இடத்திற்கு மேற்கில் உள்ளது. சர்வே எண் .297/2J க்கு மேற்கில் பொன்னுச்சாமி நாடார், கைலாசம், ஆறுமுகச்சாமி நாடார் புஞ்சை இடமானது உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 ல் காட்டப்பட்ட எல்கைப்படி சர்வே எண் .297/2J ஆவணத்தில் காட்டப்பட்ட எல்கைக்கு உட்பட்டு வருகிறது என்றால் சரிதான். சர்வே எண் .297/2J பாதை சம்பந்தமாக பிரச்சனை இருந்துவருவதால் பி.வா.சா.ஆ.1ல் பாதை பற்றி காட்டப்படவில்லை என்றால் சரியல்ல. வாதிகளின் முன் ஆவணங்களில் பாதை பற்றி காட்டப்பட்டுள்ளது என்றால் தெரியாது காளியப்ப நாடார் எழுதிய ஆவணத்தில் பாதை இல்லை என வருகிறது. சர்வே எண் .297/2J க்கு கீழ்புறம் உள்ள சர்வே எண் .297/2M ல் உள்ள வீடுகளில் எங்களுக்கு எந்த பிரச்சனையும் இல்லை என்றால் நாங்கள் பிரச்சனை செய்யவில்லை அவர்கள் தான் பிரச்சனை செய்கிறார்கள். என்னால் தாக்கல் செய்யப்பட்ட பி.வா.சாஆ.1 எங்களுக்கு உதவியானது கிடையாது என்றால் சரியல்ல. உபய தரப்பினர்களின் முன்பாத்தியதஸ்ரான சந்திரசூரிய பிள்ளை வழக்குச் சொத்துக்கள் சம்பந்தமாக பிறப்பித்த ஆவணங்களில் பாதை காண்பித்தே ஆவணம் பிறப்பித்துள்ளார் அதனால் தான் முன் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. அதனால் எனது வழக்கு வாதிகளின் வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட வேண்டும் 3 வது தபசில் கட்டுமானத்தை இடித்து கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல.

<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.</u>

<u>மறுவிசாரணை இல்லை.</u>

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.03.02 17:38:36 +0530